


03.10.2026

## தலைப்புச் செய்திகள்

- வளர்ச்சி அடைந்த பாரதத்தை கட்டமைக்க ஒருங்கிணைந்த முயற்சிகளின் அவசியத்தை குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.
- இந்திய - அமெரிக்க பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் பட்டய கணக்காளர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்திற்கான உரிமைகளை போராடி பெற்றுதந்தவர் தமிழ் அறிஞர் மா.பொ.சிவஞானம் என்று மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.
- தமிழ்நாட்டில் மின் வெட்டை சரி செய்ய மின்சாரம் கொள்முதல் செய்யப்படுவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு.நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

- ஆசிய விளையாட்டில் பாகிஸ்தானுக்கு எதிரான 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

************

சி.பி.ராதாகிருஷ்ணன்

வளர்ச்சியின் பலன்கள் நாட்டின் அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைக்க வேண்டியதன் அவசியத்தை குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற 5ஆவது கௌட்டில்யா பொருளாதார மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், நிலையான வளர்ச்சி என்ற அடித்தளத்துடன் அனைத்தையும் உள்ளடக்கிய மேம்பாட்டுடன் முன்னேற்ற பாதையில் செல்ல முடியும் என்று சுட்டிக்காட்டினார்.

நாட்டில் உள்ள கடைகோடி மக்களும் விடுபடாமல் வளர்ச்சியின் பலன்களை பெறுவதே பொருளாதார மீட்சியின் பயன் என்றும் குறிப்பிட்டார்.

வளர்ச்சி அடைந்த பாரதத்தை கட்டமைக்க ஒருங்கிணைந்த முயற்சிகளின் அவசியத்தை குடியரசு துணை தலைவர் எடுத்துரைத்தார்.

அனைவரும் ஏற்றுக்கொள்ள கூடிய ஒருமித்த முடிவை நோக்கியே வாதங்களும், விவாதங்களும், அமைய வேண்டும் என்றும் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவுறுத்தினார்.

************

அமித்ஷா

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு 2029-ஆம் ஆண்டிற்குள் போதையில்லா இந்தியாவை உருவாக்க உறுதிபூண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அமைச்சர் வெளியிட்ட செய்தியில் துருக்கியை சேர்ந்த போதை பொருள் கடத்தல் குற்றவாளி நவ் ப்ரீத் சிங் வெற்றிகரமாக கைது செய்யப்பட்டு நம் நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு பெருமளவிலான போதை பொருட்களை துருக்கி நாட்டு குடியுரிமையின் கீழ், போலி பெயரில் இவர் தொடர்ந்து கடத்தி வந்ததாகவும், பல்வேறு கடத்தல் குற்றங்களில் தொடர்புடைய இவரின் அடையாளத்தை வெளிப்படுத்தி இந்தியா கொண்டு வரப்பட்டதாகவும் எடுத்துரைத்தார்.

தற்போது அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த வெற்றிகரமான செயல்பாட்டை மேற்கொண்ட அனைத்து புலனாய்வு நிறுவனங்களுக்கும் திரு.அமித்ஷா பாராட்டு தெரிவித்துள்ளார்.

************

பியூஷ்கோயல்

இந்திய - அமெரிக்க பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் பட்டய கணக்காளர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள இந்திய பட்டய கணக்காளர்களுடன் கலந்துரையாடிய அவர், எல்லை தாண்டிய வரிமுறைகள், ஒழுங்குமுறை நடவடிக்கைகள், நிதி ஆளுமையில் அவர்களின் செயல்பாட்டை எடுத்துரைத்தார்.

வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையில் இந்திய தொழில் நிறுவனங்கள் தயார் நிலையில் இருப்பதற்கு பட்டய கணக்காளர்களின் பங்களிப்பை அவர் சுட்டிக்காட்டினார்.

வலுவான உள்நாட்டு வளர்ச்சியுடன் கூடிய நாட்டின் பொருளாதார உத்வேகம், பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தன்னம்பிக்கை, சுயசார்பு கொள்கைகளை பிரதிபலிப்பதாக கூறினார்.

************

பிரதமர் - மனதின்குரல்

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் மனதின் குரல் வானொலி நிகழ்ச்சி 12 ஆண்டுகளை இன்று நிறைவு செய்துள்ளது.

2014-ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தன்று இதே நாளில் பிரதமரின் முதலாவது மன் கீ பாத் மனதின் குரல் நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.

அண்மையில் 138ஆவது மன் கீ பாத் நிகழ்ச்சி ஒலிபரப்பானது.

கடந்த 12 ஆண்டுகளில் மனதின் குரல் நிகழ்ச்சி நாட்டின் பல்வேறு மாற்றங்களுக்கு வழிகோலியதோடு, வளர்ச்சி பாதையில் குடிமக்கள் எழுச்சியுடன் பங்கேற்கவும், உத்வேகம் அளித்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் நாட்டில் உள்ள பல்வேறு பகுதிகளை சேர்ந்த மக்களின் ஆக்கப்பூர்வமான உத்வேகம் மிகு செயல்பாடுகளை பிரதமர் வானொலி மூலம் பகிர்ந்துகொண்டதோடு, கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, புத்தாக்க திறன்கள், சமூக சேவையில் அவர்கள் ஆற்றிவரும் அளப்பரிய செயல்களையும் பகிர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

************

எல்.முருகன்

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட காலங்களில் தமிழகத்திற்கான உரிமைகளை போராடி பெறுவதில் தமிழ் அறிஞர் மா.பொ.சிவஞானம் முக்கிய பங்கு வகித்ததாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

சிலம்பு செல்வர் என போற்றப்படும் மா.பொ.சி.யின் 31ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுவதை ஒட்டி அமைச்சர் வெளியிட்ட செய்தியில், பத்திரிக்கையாளராகவும், எழுத்தாளராகவும் நாட்டின் விடுதலைக்கு சிறந்த பங்களித்த அவரை நினைவு கூறுவோம் என குறிபிட்டுள்ளார்.

************

நிர்மல்குமார்

தமிழ்நாட்டில் மின் வெட்டை சரி செய்ய மின்சாரம் கொள்முதல் செய்யப்படுவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு.நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேலும் சில மாதங்களில் நீண்டகால கொள்முதல் மின்சாரத்திற்கான ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நெய்வேலியிலிருந்து மத்திய தொகுப்பிற்கு வரும் மின்சாரம் நிறுத்தப்பட்டதால் தான், தொழில்துறையினர் ஜெனரேட்டரை பயன்படுத்த கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாக கூறினார்.

தொழில்துறையினருக்கு எந்த ஒரு மின்சார தடையும் செய்யப்படவில்லை என்றும், தற்காப்பு காரணமாக ஒருசில பகுதிகளில் அதுபோன்ற அறிவிப்புகள் வெளியிடப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை இடைத்தேர்தலில் த.வெ.க வெற்றிபெறும் என திரு.நிர்மல்குமார் உறுதிபட தெரிவித்தார்.

************

இடைத்தேர்தல்

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிக்கு வரும் செவ்வாய்கிழமை நடைபெறும் வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் நிறைவடைகிறது.

இதனையடுத்து இவ்விரு தொகுதிகளிலும் அரசியல் கட்சி தலைவர்கள் இறுதிகட்ட வாக்கு சேகரிப்பில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே தாராபுரத்தில் தேர்தல் பணிகளில் ஈடுபடும் காவல்துறையினருக்கான தபால் வாக்கு பதிவு இன்று நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

ஆம்னி

தமிழகத்தில் ஆம்னி பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதை தடுக்க தீவிர வாகன தணிக்கை நடைபெறுவதாக அரசு தெரிவித்துள்ளது.

பண்டிகை கால கூட்ட நெரிசலை சமாளிக்க வெளிமாநிலங்களிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆம்னி பேருந்துகள் தமிழகத்தில் இயங்க அனுமதி வழங்கப்பட்ட நிலையில் இந்நடவடிக்கை.

************

இருவரி

மயிலாடுதுறை மாவட்டத்தில் பிரதமரின் தொழிற்பயிற்சி திட்டத்தின் கீழ் முன்னனி நிறுவனங்களில் பயிற்சி பெற விரும்பும் இளையோர் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

18 முதல் 25 வயதிற்குட்பட்டு 10ஆம்வகுப்பு முதல் பட்டப்படிப்பு தேர்ச்சிபெற்ற இளைஞர்களுக்கு மாதம் 9 ஆயிரம்

ரூபாய் ஊக்கத்தொகையுடன் இத்திட்டத்தின் கீழ் திறன் பயிற்சிகள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

தூத்துக்குடியில் 18 வயதிற்குட்பட்ட சிறார்கள் ஓட்டி வந்த 8 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

வாகன ஓட்டுநர் உரிமம், கட்டாய தலைக்கவசம் உள்ளிட்ட சாலை விதிகளை பின்பற்றுவது குறித்து பெற்றோர்கள் குழந்தைகளுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

************

வித்யா ராம்ராஜ்

மத்திய மாநில அரசுகள் விளையாட்டு வீரர்களுக்கு அளித்து வரும் சிறந்த வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஆசிய விளையாட்டு 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் தங்கம் வென்று தமிழகம் திரும்பிய வித்யா ராம்ராஜ் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பயிற்சியாளர்களுக்கும் அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

வாய்ஸ்

************

குற்றாலம்

வன உயிரின வார விழாவை ஒட்டி குற்றாலம் மலை பகுதியில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

பிளாஸ்டிக் பயன்பாட்டால் வன உயிரினங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து இதில் எடுத்துரைக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

பேருந்து

கும்பகோணத்திலிருந்து கல்யாண ரெங்கநாதர், பரிமள ரெங்கநாதர், நாச்சியார்கோவில் சேங்கனூர் ஸ்ரீனிவாசபெருமாள் உள்ள 14 முக்கிய வைணவ ஆலயங்களை ஒரே நாளில் தரிசிக்கும் சிறப்பு ஆன்மீக சுற்றுலா பேருந்து சேவை கும்பகோணத்தில் இன்றுகாலை தொடங்கியது.

தமிழக அரசின் இந்த சிறப்பு சேவை ஆன்மீக பக்தர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக பயணி ஒருவர் தெரிவிக்கையில்

வாய்ஸ்

************

கோவில்

புரட்டாசி மூன்றாவது சனிக்கிழமையை ஒட்டி ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோவில், குணசீலம் அருள்மிகு பிரச்சன்ன வெங்கடாஜலபதி திருக்கோவில் உள்ளிட்ட பல்வேறு வைணவ ஆலயங்களில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்துள்ளது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பிற மாநிலங்களிலிருந்தும் வந்துள்ள ஆயிரக்கணக்கான பக்தர்கள் அதிகாலை முதலே நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

************

கிரிக்கெட்

ஆசிய விளையாட்டு போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா 19 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியுள்ளது.

முன்னதாக ஜப்பானில் நடைபெற்ற இப்போடம்டியில் முதலில் பேட் செய்த இந்தியா 6 விக்கெட் இழப்பிற்கு 211 ரன் எடுத்திரந்த நிலையில் 212 என்ற வெற்றி இலக்குடன் தொடர்ந்து விளையாடிய பாகிஸ்தான் 6 விக்கெட் இழப்பிற்கு 192 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதனையடுத்து இந்தியா இந்த போட்டியில் தங்க பதக்கத்தை கைப்பற்றியது.

தற்போது 19 தங்கம் 26 வெள்ளி, 36 வெண்கலம் என 81 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் இந்தியா 5-வது இடத்தில் உள்ளது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது